**தூத்துக்குடி மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை**

**(செப்டம்பர் 19-ம் தேதி முதல் செப்டம்பர் 23-ம் தேதி வரை)**

**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (15.9.15- 17.9.15)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 34- 35 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 26- 27 |
| வானம் (ஆக்டா) | 4- 6 |
| ஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 86- 90 |
| ஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 52- 56 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 21- 23 |
| காற்றின் திசை | 230 |

**23.9.15 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு**

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>19.9.15 | நாள் 2<br>20.9.15 | நாள் 3<br>21.9.15 | நாள் 4<br>22.9.15 | நாள் 5<br>23.9.15 |
| மழை (மி.மீ.) | 1 | 1 | 4 | 25 | 9 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 34 | 34 | 34 | 33 | 33 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 26 | 26 | 26 | 25 | 25 |
| வானம் (ஆக்டா) | 6 | 6 | 6 | 6 | 6 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 60- 80 | 60- 80 | 68- 82 | 70- 86 | 68- 84 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 22/ தென்மேற்கு | 22/ தென்மேற்கு | 22/ தென்மேற்கு | 22/ தென்மேற்கு | 22/ தென்மேற்கு |

வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிகமான மேகமூட்டம், இலேசானது முதல் மிதமான மழை மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| பயிர்/ சாகுபடி சூழல் | பருவம்/ சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனை |
|---|---|---|
| பருத்தி, சோளம் | முன்பருவ விதைப்பு செய்தல் | மானாவாரியில் பருத்தி மற்றும் சோளம் சாகுபடி செய்யப்படும் பகுதிகளில் அந்தந்த பகுதிகளில் எதிர்பார்க்கப்படும் இயல்பாக பருவமழை தொடங்கும் சமயத்தின் அடிப்படையில் வழக்கமாக பருவமழை தொடங்கும் சமயத்திற்கு 2 வாரங்களுக்கு முன்பு பருத்தி மற்றும் சோளத்தை முன்பருவ விதைப்பு செய்யவும். முன் பருவ விதைப்பு செய்வதால் தொடக்கத்தில் கிடைக்கும் மழையை திறம்பட பயன்படுத்திக்கொள்ள இயலும். |

| | | |
|---|---|---|
| சோளம் | விதையளவு | மானாவாரியில் சோளத்தை முன்பருவ விதைப்பு செய்வதற்கு 22.5 கிலோ/எக்டர் என்ற அளவில் (பரிந்துரைக்கப்படும் விதையளவின் 1.5 மடங்கு) விதைகளை பயன்படுத்தவும். |
| | விதை கடினப்படுத்துதல் | மானாவாரியில் முன்பருவ விதைப்பு செய்யப்படும் சோளத்தின் முளைப்புத்திறனை மேம்படுத்த விதைகளை கடினப்படுத்தி விதைக்கவும். விதைகளை 2 சத பொட்டாசியம் டைஹைட்ரஜன் பாஸ்பேட் கரைசலில் 6 மணி நேரம் ஊறவைத்து பின்பு முன்பு இருந்த ஈரப்பதத்திற்கு நிழலில் உலர்த்தி விதைக்கவும். ஊறவைப்பதற்கு விதைகளின் கொள்ளளவிற்கு சரிசமமான அளவு கரைசலை பயன்படுத்தவும். |
| | பூச்சிக்கொல்லி விதை நேர்த்தி | மானாவாரியில் சோளத்தில் பூச்சி தாக்குதலை குறைக்க விதைகளை 15 கிராம் குளோர்பைரிபாஸ் + 150 மி.லி. பசையுடன் கலந்து நிழலில் உலர்த்தி விதைக்கவும். |
| சோளம், பருத்தி | உயிர்உர விதைநேர்த்தி | மானாவாரி சோளம் மற்றும் பருத்தியில் உரத்தேவையை குறைக்கும் விதத்தில் உயிர் உரங்களை பயன்படுத்தவும். 3 பாக்கெட்டுகள் அசோஸ்பைரில்லம், 3 பாக்கெட்டுகள் பாஸ்போபாக்டீரியா அல்லது 6 பாக்கெட்டுகள் அசோபாஸ் உடன் விதைகளை விதைநேர்த்தி செய்து விதைக்கவும். விதை கடினப்படுத்துதல் மற்றும் பூச்சிக்கொல்லி விதைநேர்த்தி ஆகியவற்றை முடித்தபிறகு இறுதியாக உயிர் உர விதைநேர்த்தி செய்யப்பட வேண்டும். |
| சோளம் | விதைத்தல் | கடினப்படுத்தப்பட்ட சோள விதைகளை பருவமழை தொடங்குவதற்குமுன்பு முன்பருவ விதைப்பாக விதை மற்றும் உரம் விதைக்கும் கருவியைக்கொண்டு சீராக 5 செ.மீ. ஆழத்தில் விதைக்கவும். 40:20:0 கிலோ, எக்டர் என்ற அளவில் தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களை இடவும். உரம் விதைக்கப்பட்ட அதே வரிசையில் விதைகளை விதைத்து மண்ணால் மூடவும். விதைகளை 15 செ.மீ. இடைவெளிவிட்டு 60 செ.மீ. இடைவெளியில் அமைந்த இரட்டை வரிசைகளில் விதைக்கவும். |

குறுஞ்செய்தி-: மழை: செப்டம்பர் 19- 23: 1, 1, 4, 25& 9 மி.மீ. மானாவாரி- பருத்தி& சோளம்- அந்தந்த பகுதிகளில் பருவமழை தொடங்கும் சமயத்திற்கு 2 வாரங்களுக்கு முன்பு முன்பருவ விதைப்பு செய்யவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி